**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**
**MCOP.No. 66/ 2023, C/W.64/2023**

Deposition of witness for **PW2** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Sathya | Husband Name | : SanthaKumar |
| Village | : | Age | : |

**நாள்:11.09.2025.**

**ம.சா.2 முதல் விசாரணை :**

நான் MCOP 64/2023 ல் மைனர். மனுதாரின் பாதுகாவலர் ஆவேன். நான் மைனருக்காக MCOP.No.64/2023 ஐ தாக்கல் செய்திருக்கிறேன். நான் இந்த மனுவில் ம.சா.2 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டுகிறேன்.

எனது மகளின் காயச்சான்றிதழ் உண்மை நகல் **ம.த.சா.ஆ.10** ஆகும்.

எனது மகளின் அரசு மருத்துவமனை விடுவிப்பு சான்று **ம.த.சா.ஆ.11** ஆகும்.

நாதன் மருத்துவமனையில் எனது மகளுக்கு ஏற்பட்ட மருத்துவமனை பில்கள் ரூ.4,450/- **ம.த.சா.ஆ.12 ஆகும்.**

எனது மகளின் ஆதார் அட்டையின் நகல் அது அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. ம.த.சா.ஆ.13 ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்தின் போது நான் ஆட்டோவில் சென்றேனா என்றால் இல்லை. ஆட்டோவில் எனது மகள் எனது அம்மா, எனது சித்தி மகன் ஆகியோர்கள் சென்றார்கள். விபத்து எப்படி ஏற்பட்டது என்றால் நான் நேரில் பார்க்கவில்லை. ஆட்டோ வேகமாக சென்று பிரேக்போட்டு கவிழ்ந்துவிட்டது என்று கேள்விபட்டேன். விபத்தில் எனது அம்மாவிற்கும் எனது மகளுக்கும் காயம் ஏற்பட்டது. ஆட்டோ ஓட்டுநர் பெயர் தெரியாது. ஆட்டோ ஓனரை தெரியும். ஆட்டோவை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. விபத்திற்கு பிறகு யார் புகார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தார். ஆட்டோவிற்கு உண்டான தகுதி சான்று, பர்மிட் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தானது சூளகிரி ரோட்டில் கணேசா ஆஸ்பிட்டல் முன்பு நடந்தது. ஆட்டோவானது தருமபுரி மாவட்டத்திற்குள் ஓட்டுவதற்கு மட்டும் தான் பர்மிட் உள்ளது என்றும் வேறு மாவட்டத்தில் ஓட்டுவதற்கு பர்மிட்

கிடையாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆட்டோ ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும் அந்த ஆட்டோவிற்கும் பர்மிட் மற்றும் தகுதி சான்று இல்லாததால் 3ம் எதிர் மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டவர் இல்லை என்றும் நான் இழப்பீடு பெறவேண்டும் என்றால் ஆட்டோ உரிமையாளரிடம் தான் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு இடது பக்க தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. முதலில் எனது மகள் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம் . பிறகு அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். எனது மகள் இரண்டு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். எனது மகளுக்கு மருத்துவமனைபில்களில் உள்ளவாறு செலவு ஏற்படவில்லை என்றும் அந்த பில்கள் கிடைக்கவேண்டுமானால் நான் மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்து நிருபிக்கவேண்டும் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனது மகளுக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனது மகளுக்கு நிறந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் ஆட்டோவிற்கு பர்மிட் மற்றும் தகுதி சான்று இல்லாததால் பாலிசி வைலேசன் இருப்பதால் 3ம் எதிர் மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விபத்தின் போது எனது மகளுக்கு சுமர் 13 வயது இருக்கும். விபத்தின் போது எனது மகள் பள்ளியில் படித்து கொண்டிருந்தார். தற்போதும் பள்ளியில் படித்து வருகிறார். எனது மகள் பள்ளிக்கு போவதால் அவருக்கு தனியாக வரும் கிடையாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.

**MCOP. 66/ 2023, C/W.64/2023- PW1 .**

**திருமதி.சிவகாமி, க/பெ. முருகேசன்**

**நாள்:11.09.2025.**

**குறுக்கு விசாரணை 3.ம் எதிர்மனுதாரர் தரப்பில் :**

விபத்தின் போது நான் ஆட்டோவில் சென்றேனா என்றால் ஆமாம். ஆட்டோவில் நான், எனது பேத்தி, எனது தங்கை மகன் ஆகியோர் சென்றோம். விபத்து எப்படி ஏற்பட்டது என்றால் சந்தையில் காய்கறி இறக்கிவிட்டு திரும்ப வரும்போது ஆட்டோஓட்டுநர் மிகவும் வேகமாக ஓட்டிவந்தார் நாங்கள் மெதுவாக போகசொன்னேன். ஆட்டோ வேகமாக சென்று பிரேக்போட்டு கவிழ்ந்துவிட்டது. விபத்தில் எனக்கும், எனது பேத்திக்கும் காயம் ஏற்பட்டது. எனது தங்கை மகனுக்கு பெரிதாக காயம் இல்லை. ஆட்டோ ஓட்டுநர் பெயர் தெரியாது. ஆட்டோ ஓனரை தெரியும். ஆட்டோவை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. விபத்திற்கு பிறகு யார் புகார் கொடுத்தது என்றால் எனது மகள் புகார் கொடுத்தார். விபத்திற்கு பிறகு ஆட்டோவை மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைக்கு எடுத்து சென்றது குறித்து நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆட்டோவிற்கு உண்டான தகுதி சான்று, பர்மிட் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தானது சூளகிரி ரோட்டில் கணேசா ஆஸ்பிட்டல் முன்பு நடந்தது. நான் சென்ற ஆட்டோவானது தருமபுரி மாவட்டத்திற்குள் ஓட்டுவதற்கு மட்டும் தான் பர்மிட் உள்ளது என்றும் வேறு மாவட்டத்தில் ஓட்டுவதற்கு பர்மிட் கிடையாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆட்டோ ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும் அந்த ஆட்டோவிற்கும் பர்மிட் மற்றும் தகுதி சான்று இல்லாததால் 3ம் எதிர் மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டவர் இல்லை என்றும் நான் இழப்பீடு பெறவேண்டும் என்றால் ஆட்டோ உரிமையாளரிடம் தான் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் இடுப்பு எலும்பு மற்றும் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. முதலில் நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பிறகு நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். இரண்டு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனைபில்களில் உள்ளவாறு எனக்கு செலவு ஏற்படவில்லை என்றும் அந்த பில்கள் எனக்கு கிடைக்கவேண்டுமானால் நான் மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்து நிருபிக்கவேண்டும் என்றால் சரியல்ல. கார் பில் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதற்கு தாக்கல் செய்துள்ளேன். இழப்பீடு அதிகமாக பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போ எனக்கு என்ன வயது என்றால் சுமார் 60 இருக்கும். விபத்தின் போது நான் காய்கறி வியாபாரம் செய்து வந்தேன். தற்போது வீட்டில் இருக்கிறேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிறந்தர

**ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஆட்டோஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் ஆட்டோவிற்கு பர்மிட் மற்றும் தகுதி சான்று இல்லாததால் பாலிசி வைலேசன் இருப்பதால் 3ம் எதிர் மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.